# QB365 Question Bank School

**Half Yearly Model Question - 2023**

8th Standard

Total Marks : 100

**PART - A** 14 x 1 = 14

**ANSWER THE ALL QUESTION**

1) பிளாசிப் போர் நடை பெற்ற ஆண்டு

**(a) 1757** (b) 1764 (c) 1765 (d) 1775

2) மகல்வாரி முறையில் ’மகல்’ என்றால் என்ன?

(a) வீடு (b) நிலம் **(c) கிராமம்** (d) அரண்மனை

3) ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழிநடத்தினார்?

**(a) மத்திய இந்தியா** (b) டெல்லி (c) கான்பூர் (d) பரெய்லி

4) சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை?

(a) அதிவேகம் (b) குடிபோதையில் ஓட்டுதல் (c) ஓட்டுநர்கள் கவனச்சிதறல்
**(d) இவை அனைத்தும்**

5) சார்புத் துறை _____ வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

(a) 4 (b) 3 **(c) 2** (d) 5

6) கல்கூர்லி சுரங்கம் ______ கனிமத்திற்குப் புகழ் பெற்றது.

(a) வைரம் (b) பிளாட்டினம் (c) வெள்ளி **(d) தங்கம்**

7) ஆங்கிலேயர்கள் நிறுவிய முதல் வணிக மையம்.

(a) தரங்கம்பாடி (b) சூரத் **(c) மசூலிப்பட்டினம்** (d) நாகப்பட்டினம்

8) 1856 ல் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்ற கலகம்

**(a) சந்தால் கலகம்** (b) இண்டிகோ கலகம் (c) பாப்னா கலகம் (d) தக்காண கலகம்

9) மத்திய இந்தியாவில் புரட்சியை வழிநடத்தியவர்

(a) மங்கள் பாண்டே (b) பகதூர் ஷா **(c) இராணி லட்சுமிபாய்** (d) நானா சாகிப்

10) ஐக்கிய நாடுகள் சபை (UNO) நிறுவப்பட்ட ஆண்டு

**(a) அக்டோபர் 24, 1945** (b) அக்டோபர் 14, 1945 (c) அக்டோபர் 24, 1955
(d) அக்டோபர் 24, 1965

11) _________ வகையான போக்குவரத்து குறியீடுகள் உள்ளன.

(a) ஒன்று (b) இரண்டு **(c) மூன்று** (d) நான்கு

12) முதல் நிலை பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்று

(a) மருத்துவம் (b) வர்த்தகம் **(c) வேட்டையாடுதல்** (d) வங்கி

13) "தென் ஆப்பிரிக்காவின் வாழ்வாதார நதி"

(a) காங்கோ (b) நைல் **(c) ஜாம்பசி** (d) நைஜர்

14) ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பாலைவனம்

(a) பின்னக்கல்ஸ் பாலைவனம் (b) கிப்சன் பாலைவனம் (c) தனாமி பாலைவனம்
**(d) பெரிய விக்டோரியா பாலைவனம்**

**PART - B** 10 x 2 = 20

**ANSWER THE ALL QUESTION**

15) இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?

**Answer :** (i) ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் போர்ச்சுக்கல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.
(ii) போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.
(iii) எனவே அவர் "மாலுமி ஹென்றி" என அழைக்கப்படுகிறார்.

16) தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?

**Answer :** (i) தீப்பாறைகள் புவியின் ஆழமான பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு (மாக்மா) உறைந்து உருவானதாகும்.
(ii) இப்பாறைகளிலிருந்து தான் மற்ற பாறைகள் உருவாகின்றன. எனவே இவற்றை முதன்மை பாறைகள் அல்லது தாய்பாறைகள் என்று அழைக்கிறோம்.

17) மண்ணின் வகைகளைக் கூறுக

**Answer :** 1. வண்டல் மண்
2. கரிசல் மண்
3. செம்மண்
4. சரளை மண்
5. மலை மண்
6. பாலை மண்

18) இந்திய அரசியலமைப்பின் 45 வது சட்டப்பிரிவு எதனை அறிவுறுத்துகிறது?

**Answer :** 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

19) நடமாடும் நீதிமன்றங்களின் நன்மைகள் யாவை?

**Answer :** (i) நடமாடும் நீதிமன்றங்கள் கிராமப்புற மக்களுக்கு இடர்களை தீர்க்கும் ஒன்றாய் இருக்கின்றன.
(ii) இவை கிராமப்புற மக்களிடையே நீதி அமைப்பு பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களது செலவைக் குறைத்து அவர்களின் வாழிடங்களிலேயே நீதியை வழங்க வகை செய்கின்றன.

20) பின்வரும் குறியீடுகள் எதைக் குறிக்கின்றன?

(அ)  (ஆ)  (இ)  (ஈ) 


**Answer :** (அ) இடப்பக்க வளைவு
(ஆ) பாலம்
(இ) செல்ல அனுமதி இல்லை
(ஈ) வேக கட்டுப்பாட்டு அளவு

21) துறைமுக நகரங்கள் பற்றி குறிப்பு வரைக.

**Answer :** (i) ஆங்கிலேயர்கள் வர்த்தகத்திற்காக இந்தியா வந்தனர். மதராஸ், கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகியவை முக்கிய துறைமுகங்களாக மாறின.
(ii) இவை வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தன. ஐரோப்பிய பாணியிலான உயரமான கட்டடங்களுடன் இந்த நகரங்கள் முக்கிய வணிகப் பகுதிகளாக மாறின.
(iii) ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் அதன் தொழிற்சாலைகளை அமைத்ததோடு குடியேற்றத்தின் பாதுகாப்பிற்காக கோட்டைகளையும் அமைத்தனர்.
(iv) சென்னையின் புனித ஜார்ஜ் கோட்டையும் கல்கத்தாவின் புனித வில்லியம் கோட்டையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

22) குழந்தைத் திருமணத்தை தடுத்திட அக்பர் எவ்வாறு முயன்றார்?

**Answer :** (i) அக்பர் குழந்தை திருமணத்தை தடுத்ததுடன் திருமணத்திற்கு முன் மணமகளின் ஒப்புதலை பெற்றோர்கள் கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார்.
(ii) அவர் பெண்ணிற்கான திருமண வயது 14 எனவும் ஆண்களுக்கான திருமண வயது 16 எனவும் நிர்ணயித்தார்.

23) இந்திய ஆயுதப்படைகள் என்பன யாவை?

**Answer :** இந்திய ஆயுதப்படையானது நாட்டின் இராணுவப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக்காவல்படை ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைப் படைகள் ஆகும். அவை பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.

24) மத்திய ஆயுதப்படையின் ஐந்து பிரிவுகள் யாவை?

**Answer :** (i) மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF)
(ii) இந்தோ - திபெத்திய எல்லைக் காவல் (ITBP)
(iii) மத்திய தொழிலக பாதுகாப்புப் படை(CISF)
(iv) எல்லை பாதுகாப்புப் படை (BSF)
(v) சிறப்பு சேவை பணியகம் (SSB)

**PART - C** 7 x 3 = 21

**ANSWER THE ALL QUESTION**

25) 'பாறைகள்' வரையறு.

**Answer :** (i) பாறைகள் என்பது திட கனிம பொருட்களால் புவியின் மேற்பரப்பில் மற்ற கோள்களில் உள்ளது போல் உருவானதாகும்.
(ii) புவியின் மேலோடு (நிலக்கோளம்) பாறைகளால் உருவானது.
(iii) பாறைகள், ஒன்று அல்லது பல கனிமப் பொருட்களால் ஆனவை.
(iv) இது திடநிலையில் உள்ள ஒரு முக்கியமான இயற்கை வளம் ஆகும்.
(v) பாறைகள் இயற்கையிலே கடின மற்றும் மென்தன்மை கொண்டதாகும்.
(vi) பாறைகள் என்பது கனிமங்கள் தனித்த கூறுகளாகவோ அல்லது கூட்டுக்கலவைகளாகவோ உருவாகலாம்.

26) இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக விளங்குவன யாவை?

**Answer :** i) புனித பிரான்சிஸ் ஆலயம் (கொச்சி)
ii) புனித லூயிஸ் கோட்டை (பாண்டிச்சேரி)
iii) புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை)
iv) புனித டேவிட் கோட்டை (கடலூர்)
v) இந்தியாகேட் (டெல்லி)
vi) பாராளுமன்றம் (டெல்லி).
vii) குடியரசுத்தலைவர் மாளிகை (டெல்லி)

27) இந்தியாவில் ஆங்கில நிர்வாகத்தில் காணப்பட்ட நீதித்துறை குறித்து விவரி.

**Answer :** 1. 1772-ல் இரட்டை ஆட்சியை ஒழித்து வரிவசூல் மற்றும் நீதி வழங்கும் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டது.
2. சிவில் நீதிமன்றமான திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றமான பௌஜ்தாரி அதாலத் ஏற்படுத்தப்பட்டது.
3. ஒழுங்கு முறை சட்டப்படி கல்கத்தாவில் உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டு ஒரு முதன்மை நீதிபதியும் மூன்று துணை நீதிபதிகளையும் பிரிட்டிஷார் நியமித்தனர்.
4. இதைப்போன்று 1801-ல் மதராஸிலும் 1823-ல் பம்பாயிலும் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
5. சட்டங்களை தொகுக்க சட்ட ஆணையம் அமைக்கப்பட்டு நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.
6. 1861-ம் ஆண்டு கல்கத்தா, பம்பாய், மதராஸ் ஆகிய இடங்களில் உச்ச நீதிமன்றங்களுக்குப் பதில் 3-ல் உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

28) பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் பற்றி விவரி?

**Answer :** 1. நகர்ப்புற வட்டிக்காரர்களிடமிருந்து பெற்ற கடனை திரும்ப செலுத்த இயலவில்லை.
2. வட்டிக்கடைக்காரர்களின் ஒடுக்கு முறையை தடுக்க புரட்சியில் ஈடுபட்டனர்.
3. ஆங்கில அரசு புரட்சியை விரும்பவில்லை. ஏனென்றால் இராணுவ வீரர்கள் அப்பகுதியில் தேர்வு செய்யப்பட்டனர்.
4. 1900ல் பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம் நிறைவேற்றப்பட்டு மற்ற பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டது.
5. இச்சட்டப்படி மக்கள் விவசாயிகள், வட்டிக்கடைக்காரர்கள், இதர மக்கள் என பிரிக்கப்பட்டனர்.

29) வேலு நாச்சியார் பற்றி ஒரு பத்தியில் விடையளி.

**Answer :** 1. சிவகங்கையின் இராணி வேலு நாச்சியார் 16 வயதில் முத்து வடுகநாதருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
2. ஆங்கிலப்படை 1772ல் முத்துவடுக நாதரை காளையார் கோயில் போரில் கொன்றதால் வேலு நாச்சியார் தன் மகளுடன் கோபாலநாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார்.
3. இக்காலகட்டத்தில் ஒரு படையை அமைத்து சகோதரர்கள் உதவியுடன் ஆங்கிலேயரை தோற்கடித்து சிவகங்கை இராணியானார்.
4. பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து போரிட்ட முதல் இந்திய பெண்ணரசி ஆவார்.
5. இவர் தமிழர்களால் வீரமங்கை தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அழைக்கப்படுகிறார்.

30) ஊடுருவிய தீப்பாறைகள் - குறிப்பு வரைக.

**Answer :** (i) பாறைக்குழம்பு புவிபரப்பிற்கு கீழே பறை விரிசல்களிலும், பாறைகளிலும் ஊடுருவிச் சென்று உறைந்து உருவாகும் பாறைகள் ஊடுருவிய தீப்பாறைகள் எனப்படும்.
(ii) இவை மெதுவாகக் குளிர்வதால் பேரிழைகளாக உருவாகும்.
(iii) ஊடுருவிய தீப்பாறைகள் அடியாழப் பாறைகள், இடையாழப் பாறைகள் என இரு வகைப்படும்.

31) காலநிலை மற்றும் வானிலையின் முக்கியக் கூறுகள் யாவை?

**Answer :** (i) வெப்பநிலை
(ii) மழை வீழ்ச்சி
(iii) காற்றழுத்தம்
(iv) ஈரப்பதம்
(v) காற்று

**PART - D** 9 x 5 = 45

**ANSWER THE ALL QUESTION**

32) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், பணிகளையும் எழுதுக.

**Answer :** (i) அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் ஆட்கொணர்வு நீதிப்பேராணை போன்ற பல பேராணைகளைப் பிறப்பிக்கின்றன.
(ii) ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள அனைத்து சார் நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது.
(iii) சார்நிலை நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ஒரு வழக்கில் சட்ட முகாந்திரம் உள்ளதாக உயர்நீதிமன்றம் எண்ணினால், அவ்வழக்கினை எடுத்து, தானே முடிவு செய்யலாம்.
(iv) உயர்நீதி மன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
(v) உயர்நீதி மன்றம் உச்ச நீதி மன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச்சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.
(vi) நீதி நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
(vii) மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.
(viii) நீதிமன்றங்கள் அதிகாரங்களை தனது எல்லைக்குள் செயல்படுத்தும் போது, அது முழு அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது.
(ix) அரசியலமைப்பின் பாதுகாப்பு என்பது நீதிமன்றங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

33) ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

**Answer :** **குடியுரிமையை துறத்தல்:**
(i) ஒருவர் வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.
**குடியுரிமை முடிவுக்கு வருதல்:**
(i) ஓர் இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்பட்டுகிறது.
**குடியுரிமை மறுத்தல்:**
(i) மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாகச் செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.

34) பணத்தின் பணிகள் யாவை? அவற்றை விளக்குக.

**Answer : பணத்தின் பணிகள்:**
1. முதன்மை அல்லது முக்கிய பணிகள்
2. இரண்டாம் நிலைப் பணிகள்
**முதன்மைப் பணிகள்:**
(i) பணம், பண்ட மற்றும் பணிகளை வாங்க பரிமாற்றக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.
(ii) அனைத்து மதிப்பையும் பணத்தால் அளவிடலாம், எனவே பணம், மதிப்பின் அளவுகோலாகப் பயன்படுகிறது.
**இரண்டாம் நிலைப் பணிகள்:**
(i) எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது.
(ii) பணம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் எதிர்காலத்திற்காக சேமிக்கப் பயன்படுகிறது, ஏனெனில் பணம் அழியக்கூடியது அல்ல.
(iii) பணத்தால் தொலைதூர இடங்களுக்கும், வெளிநாட்டிற்கும் பண்டங்களைப் பரிமாற்றம் செய்ய முடியும்.
(iv) ஆகவே வாங்கும் சக்தியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு பணம் அவசியமாகும்.

35) மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை பற்றி எடுத்துரைக்கவும்.

**Answer : மதராஸின் தோற்றம்:**
(i) 1637 ஆம் ஆண்டு ஆங்கில வணிகரான பிரான்சிஸ்டே மதராசபட்டினத்தை ஆய்வு செய்து, தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அது ஏற்ற இடம் என்பதைக் கண்டறிந்தார்.
(ii) கூவம் நதிக்கும் எழும்பூருக்கும் இடையில் ஒரு சிறுபகுதி நிலத்தை சந்திரகிரி அரசரின் பிரதிநிதியான தமர்லா வெங்கடபதி மானியமாக ஆங்கிலேயருக்கு வழங்கினார்.
(iii) மதராசபட்டினத்தில் ஆங்கிலேயர்கள் வணிகதளத்துடன் கூடிய தொழிற்சாலைக்கும் ஒரு கோட்டையை அமைப்பதற்கும் 1639 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது.
(iv) இக்கோட்டை குடியிருப்பு பின்னர் புனித ஜார்ஜ் குடியிருப்பு எனப்பெயர் பெற்றது. இது வெள்ளை நகரம் எனவும் குறிப்பிடப்படுகிறது.
(v) வெங்கடபதி, அவரது தந்தை சென்னப்பநாயக்கர் பெயரால் புதிய கோட்டை மற்றும் குடியேற்றங்கள் "சென்னப்பட்டினம்" என்று அழைக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். ஆனால் ஆங்கிலேயர் "மதராசபட்டினம்" என்று அழைக்க விரும்பினர்.
**மதராஸின் வளர்ச்சி:**
(i) மதராஸ் மாகாணம் ஒரு நிர்வாக துணைப்பிரிவாகும். இது மெட்ராஸ் மாகாணம் என்று குறிப்பிடப்படுகிறது.
(ii) சென்னை மாகாணம் என்பது பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இந்தியாவின் தெற்குப் பகுதியில் பெரிய நிலப்பகுதிகளை உள்ளடக்கி இருந்தது.
(iii) 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு மதராஸ் மாகாணமானது மதராஸ் மாநிலமாக மாறியது.
(iv) 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின்படி ஆந்திரா, கேரளா மற்றும் மைசூர் ஆகியன மாநிலங்களாக அமைக்கப்பட்டன.
(v) 1969 இல் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது. 1996 ஆம் ஆண்டு மதராஸ் அதிகாரபூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது.

36) 'கேடா சத்தியாகிரகம் - குறிப்பு வரைக.

**Answer :** (i) 1918-ல் குஜராத்தின் கேடா மாவட்டத்தில் இடையராத பஞ்சத்தின் காரணமாக விவசாயம் பொய்த்தது.
(ii)ஆனால் நிலவரி முழுவதையும் செலுத்த விவசாயிகளை அரசு அறிவுறுத்தியது.
(iii) இதன் விளைவாக கேடா மாவட்டத்தில் உள்ளூர் விவசாயிகள் வரிகொடா இயக்கத்தை தொடங்கினர்.
(iv) அவ்வியக்கத்திற்கு காந்தியடிகள் தலைமை ஏற்றார்.
(v) முழு பலத்துடன் சத்தியாகிரக முறையில் போராடும்படி விவசாயிகளை ஆயத்தப்படுத்தினார்.
(vi) மேலும் அச்சமின்றி எல்லா எதிர்ப்புகளையும் சந்திக்க ஊக்கமளித்தார்.
(vii) அவரது அழைப்புக்கு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு விவசாயிகளின் ஆதரவு இருந்தது.
(viii) மேலும் அரசாங்கம் விவசாயிகளுடன் ஒரு தீர்வுக்கு இணங்க வேண்டியிருந்தது.

37) 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்தின் விளைவுகள் யாவை?

**Answer :** (i) 1857 ஆம் ஆண்டு கலகம் இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. அது நிர்வாக முறை மற்றும் அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வழிகோலியது.
(ii) 1858 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின் மூலம் இந்தியாவின் நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கில அரசுக்கு மாற்றப்பட்டது.
(iii) கவர்னர் - ஜெனரல், அதன் பிறகு வைசிராய் என அழைக்கப்பட்டார்.
(iv) இயக்குநர் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் நீக்கப்பட்டு இந்திய விவகாரங்களை மேற்பார்வையிட செயலரின் தலைமையில் 15 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது.
(v) இந்திய இராணுவம் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டது. அதிகப்படியான ஆங்கிலேயர்கள், இராணுவத்தின் பணியமர்த்தப்பட்டனர்.
(vi) பிரித்தல் மற்றும் எதிர் தாக்குதல்' என்ற கொள்கை ஆங்கில இராணுவக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்தியது.
(vii) 1857 புரட்சி இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து இந்தியா ஒரே நாடு என்ற உணர்வை கொண்டுவருவதில் முக்கிய பங்கு வகித்தது. மேலும் 1857 பெரும்புரட்சி நவீன தேசிய இயக்கம் தோன்ற வழிவகுத்தது.

38) பணத்தின் சமீபத்திய வடிவங்கள் பற்றி விவரி?

**Answer :** **நெகிழிப் பணம்:**
கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் சமீபத்திய நெகிழிப் பணமாகும். பணமில்லா பரிவர்த்தனை இதன் நோக்கமாகும்.
**மின்னணு பணம்:**
மின்னணு பணம் என்பது வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னணு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவதாகும்.
**நிகழ்நிலை வங்கி: (இணைய வங்கி)**
நிகழ்நிலை வங்கி அல்லது இணைய வங்கி என்பது வாடிக்கையாளர் அல்லது பிற நிதி நிறுவனங்கள் வலைதளத்தின் மூலம் ஒரு பரந்த நிதி பரிவர்த்தனைகளை நடத்தும் ஒரு மின்னணு முறையாகும்.
**மின் வங்கி:**
மின்னணு வங்கியை தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் என்றும் அழைக்கலாம். காசோலை அல்லது ரொக்கத்தை விட ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னணு வழிமுறை பயன்படுகிறது.

39) நவீன கால உலக நகரமயமாக்கலின் வளர்ச்சி பற்றி விவரி.

**Answer :** (i) இக்கால கட்டம் பதினேழாம் நூற்றாண்டில் இருந்து தொடங்குகிறது.
(ii) இது நகரமயமாக்கலின் மூன்றாம் கட்ட வளர்ச்சியைக் குறிக்கிறது.
(iii) பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான தொழிற்புரட்சி, நகரங்கள் மற்றும் மாநகரங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது.
(iv) நவீன தொலைத் தொடர்பு, போக்குவரத்து மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எற்பட்ட புதிய வணிக கடல் வழித்தடங்களின் வளர்ச்சி, வணிகத்தளங்களையும், நகர்ப்புற பகுதிகளையும் வலுப்படுத்தின.
(v) சமீபத்திய, நகரமயமாக்கலின் வளர்ச்சி ஆப்பிரிக்க கண்டத்தில் நன்கு தென்படுகிறது.
(vi) நவீன கால துரித நகரமயமாக்கம் உலகம் முழுவதிலும் மக்கள் தொகையை மறு பரவலுக்கு உட்படுத்துகிறது.

40) சுதந்திர இந்தியாவில் பெண்கள் பற்றி விவரி.

**Answer :** (i) இந்தியாவில் பெண்கள் தற்போது கல்வி, அரசியல், மருத்துவம், கலாச்சாரம், சேவைத்துறைகள், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் உட்பட அனைத்து துறைகளிலும் பங்கேற்கின்றனர்.
(ii) இந்திய அரசியலமைப்பு (பிரிவு 14) சமவாய்ப்பு மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் என உத்திரவாதமளிக்கிறது.
(iii) பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசிய கொள்கையானது, தேசிய கல்விக் கொள்கை நிறைவேற்றப்பட்டது.
(iv) புதிதாக தொடங்கப்பட்ட "மஹளா சமக்யா" எனும் திட்டமானது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறது.
(v) பெண்களுக்கு 33 சதவீத இடத்தை ஒதுக்கியது பெண்களின் சமூக - அரசியல் செல்வாக்கில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
(vi) ஜனவரி 1992 இல் பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சட்டங்களை மறு ஆய்வு செய்வது, பெண்களுக்கு எதிரான அநீதிகள் மற்றும் உரிமைகள் மறுப்பு குறித்த தனிப்பட்ட புகார்களில் தலையிடுவது இதன் முக்கிய பணிகளாகும்.